
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
2006-2008
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

48/08



பேரவைக்குழு வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2006–2007)

(பதினாறாவது சட்டமன்றப் பேரவை)

முதலாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் .....)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை– 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2006–2007)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

முதலாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை– 600009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கங்கள்

குழுவின் அமைப்பு iii

அறிக்கை

1. முகவுரை 1

2. குழுவின் கூட்டங்கள் 1

3. பொதுக் குறிப்புரை 2

இணைப்பு–1

1) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை 3–4
2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 5–6
3) சிறு தொழில் துறை 7–9
4) கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை 10–11

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் 12

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
(2006–2007)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

(2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாளன்று நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. துரை. சந்திரசேகரன்

உறுப்பினர்கள்

திரு. கு. சின்னதுரை

திரு.ஒ. சுப்பிரமணியம்

திரு. சி. தமிழ்செல்வன்

திரு.ஏ.கே.போஸ்

திரு.ஒ.கே.சின்னராஜ்

திரு. பெ.சு. விஜயகுமார்

திருமதி ராணி வெங்கடேசன்

திருமதி பெ. கமலாம்பாள்

திரு. டி. மூர்த்தி

திரு. ஆர். ஞானதாஸ்

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	இணைச்செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	:	துணைச் செயலாளர்
திரு. கோ. சுப்புராம்	:	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2006–2007)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

முதலாவது அறிக்கை

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

2006 – 2007 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

1) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான 5–வது ஆண்டறிக்கை 17.1.2006 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. இவ்வறிக்கையை 29.11.2006 நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. ஆண்டறிக்கை நிர்ணயிக்கப்பட்ட கால அளவைவிட 9 மாதங்கள் 16 நாட்கள் காலதாமதமாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளதால் இது குறித்து அரசுச் செயலாளர் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோரிடம் குழு விளக்கம் கோரியது.

2) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான 30–வது ஆண்டறிக்கை 20.1.2006 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. இவ்வறிக்கையை 29.11.2006 நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் குழு ஆய்விற்கு எடுத்துக் கொண்டது. ஆண்டறிக்கை நிர்ணயிக்கப்பட்ட கால அளவைவிட 9 மாதங்கள் 19 நாட்கள் காலதாமதமாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளதால் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ ஆகியோரிடம் குழு விளக்கம் கோரியது.

3) தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான 21–வது ஆண்டறிக்கை 21.1.2006 நாளன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. இவ்வறிக்கையை 29.11.2006 நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் குழு ஆய்விற்கு எடுத்துக் கொண்டது. ஆண்டறிக்கை நிர்ணயிக்கப்பட்ட கால அளவைவிட 9 மாதங்கள் 20 நாட்கள் காலதாமதமாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளதால் இது குறித்து அரசுச் செயலாளர் (பொறுப்பு), சிறுதொழில் துறை, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் ஆகியோரிடம் குழு விளக்கம் கோரியது.

4) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றம் தணிக்கை அறிக்கை 25.7.2006 நாளன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. இந்த ஆண்டறிக்கையை 29.11.2006 நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் குழு ஆய்விற்கு எடுத்துக் கொண்டது. ஆண்டறிக்கை நிர்ணயிக்கப்பட்ட கால அளவைவிட 1 வருடம் 3 மாதங்கள் 24 நாட்கள் காலதாமதமாக அவைமுன் வைக்கப்பட்டதால் இது குறித்து செயலாளர் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அவர்களிடம் விளக்கம் கோரியது.

3) துறை அளித்த விளக்கம் இணைப்பு–1 இல் உள்ளது.

4) குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரம் இணைப்பு–2–ல் உள்ளது.

பொதுக் குறிப்புரை

5) குழுவின் இவ்வறிக்கைக்கு 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பெற்றது.

சென்னை–600 009,
25.1.2007,
தை 11, வியa
திருவள்ளுவராண்டு–2038.

துரை. சந்திரசேகரன்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட
ஏடுகள் குழு.

இணைப்பு–1

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

1	நிறுவனத்தின் பெயர்	தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்
2	நிதியாண்டு	2003-2004 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை
3	அவைமுன் வைக்கப்பட வேண்டிய நாள்	**31.03.2005**
4	அவைமுன் வைக்கப்பட்ட நாள்	17.1.2006
5	காலதாமத காலம்	9 மாதங்கள் 16 நாட்கள்
6	குழு ஆய்வு செய்த நாள்	**29.11.2006**
7	துறையின் பதில்	இந்த அறிக்கை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டதற்காக சிறப்பு ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்தார்:–

2003–2004 ஆம் ஆண்டில் தணிக்கை செய்வதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணமே மைய அரசின் தணிக்கை தலைவர், தணிக்கைக் குழுவை நியமிப்பதில் ஏற்பட்ட காலதாமதம்தான். அதனைத் தொடர்ந்து எல்லா நிலைகளிலும் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. எனவே, எங்களது 2003–2004 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கையினை பேரவைக்கு உரிய நேரத்தில் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. இனி வருங்காலங்களில் இம்மாதிரி காலதாமதம் இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம் என்பதையும் குழுவிற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8 குழுவின் கருத்து

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கையை பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

1	நிறுவனத்தின் பெயர்	தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம்
2	நிதியாண்டு	2003-2004 ஆம் ஆண்டிற்கான 30–வது ஆண்டறிக்கை
3	அவைமுன் வைக்கப்பட வேண்டிய நாள்	31.03.2005
4	அவைமுன் வைக்கப்பட்ட நாள்	20.1.2006
5	காலதாமத காலம்	9 மாதங்கள் 19 நாட்கள்
6	குழு ஆய்வு செய்த நாள்	29.11.2006
7	துறையின் பதில்	இந்த அறிக்கை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டதற்காக சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்தார்:–

"2003–2004 ஆண்டுத் தணிக்கை கணக்குகள் பொறுத்தவரையில் மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து ஆய்வு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. இது மத்திய அரசின் துறையாகும். மேலும், இத்தகைய குறைகளையெல்லாம் இந்த வருடத்தில் நிவர்த்தி செய்யப்படும் என்ற உறுதியை குழுவிற்கு நான் அளிக்கிறேன்".

மேலும் 2004–2005 ஆகியவற்றின் அறிக்கைகள் பொறுத்தவரை கணக்குகள் முடிக்கப்பட்டு அச்சிடுவதற்காக அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் 2005–2006 ஆண்டு கணக்குகள் பொறுத்தவரையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் எனவே இதுபோல் காலதாமதம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

8 குழுவின் கருத்து தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான 30–வது ஆண்டறிக்கை பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சிறுதொழில் துறை

1	நிறுவனத்தின் பெயர்	தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்
2	நிதியாண்டு	2003-2004 ஆம் ஆண்டிற்கான 21–வது ஆண்டறிக்கை
3	அவைமுன் வைக்கப்பட வேண்டிய நாள்	**31.03.2005**
4	அவைமுன் வைக்கப்பட்ட நாள்	21.1.2006
5	காலதாமத காலம்	9 மாதங்கள் 20 நாட்கள்
6	குழு ஆய்வு செய்த நாள்	**29.11.2006**
7	துறையின் பதில்	இந்த அறிக்கை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டதற்காக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் ஆகியோர் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்தனர்:

"தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டுக் கணக்கினை நாங்கள் 2004 ஏப்ரல் மாதத்திலேயே முடித்துவிட்டோம். தணிக்கையாளர்கள் தணிக்கை அறிக்கையை ஜூன் 2004–ல் முடித்துவிட்டனர். மாநிலக் கணக்காயர் ஒப்புதல் அளித்த கருத்துரைச் சான்றிதழ் 21.12.2004 அன்று பெறப்பட்டு அடுத்த நாள் 22.12.2004 அன்றே பொதுக் குழுவில் வைக்கப்பட்டுவிட்டது. இந்நிறுவனத்தைப் பொறுத்தவரை என்ன பிரச்சினை என்றால், இது operation–ல் இல்லை, செயல்படாத நிறுவனமாகத்தான் இருக்கிறது. ஒரு பக்கம் கலைப்பு நடவடிக்கை நடைபெற்று வருகிறது. மறுபக்கம்

board existence–ல் இருக்கிறது. கலைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதா அல்லது போர்டில் ஆண்டறிக்கையை வைப்பதா என்பதில் பிரச்சினை இருந்தது. அரசாங்கத்திற்கு 29.3.2005 அன்றே ஆண்டறிக்கையை அனுப்பிவிட்டோம். ஆனால், துரதிஷ்டவசமாக, தட்டச்சுப் பிழை, இலக்கணப் பிழை என்று சொல்லி, அதை print செய்வதற்கு 8 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இந்தத் தாமதம் தேவையற்றது, easily avoidable. இரண்டே நாட்களில் முடித்திருக்க வேண்டிய விஷயம் இது, அரசாங்கத்திற்கு அனுப்பியதில், அவர்கள் சில clarification கேட்டிருக்கிறார்கள். அதற்கு விளக்கங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. 30.11.2005 அன்றுதான் இந்தப் பணி முடிவுற்றிருக்கிறது. இதனால் 8 மாதங்கள் தேவையில்லாத காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எங்களுடைய கவனக் குறைவால்தான் இது ஏற்பட்டிருக்கிறது. பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 18.1.2006 அன்று ஒப்புதல் பெறப்பட்டு, 21.1.2006 அன்று சட்டமன்றத்தில் ஆண்டறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்களுடைய தொய்வுதான் காலதாமதமாக அறிக்கை வைக்கப்படிருப்பதற்குக் காரணம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இது போன்ற காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன்".

"இது operational unit இல்லை, செயல்படாத நிறுவனமாகத்தான் இருக்கிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற காலதாமதம் இல்லாமல் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படும் என செயலாளர் குழுவிற்கு உறுதியளித்தார்.

8	குழுவின் கருத்து	தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான 21–வது ஆண்டறிக்கை பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

தமிழ்நாடு TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றம் மீன்வளத் துறை

1	நிறுவனத்தின் பெயர்	தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்
2	நிதியாண்டு	2003-2004 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றம் தணிக்கை அறிக்கை
3	அவைமுன் வைக்கப்பட வேண்டிய நாள்	31.03.2005
4	அவைமுன் வைக்கப்பட்ட நாள்	25.7.2006
5	காலதாமத காலம்	1 வருடம் 3 மாதங்கள் 24 நாட்கள்
6	குழு ஆய்வு செய்த நாள்	29.11.2006
7	துறையின் பதில்	இந்த அறிக்கை பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டதற்காக செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அவர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்தார்:–

Sir, I can only say that we are extremely sorry that this has happened. 4-1-2005–ல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் கூர்ந்தாய்வு செய்து, இறுதியாக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு இப்பல்கலைக் கழகத்தால் 5–1–2005–ல் தான் பெறப்பட்டிருக்கிறது. ஒரேயொரு பொருளை வைத்துக் கொண்டு கூட்டம் நடத்த வேண்டாம் என்று எண்ணி கூட்டம் நடத்துவதில் காலதாமதம் ஆகியிருக்கிறது. அதற்குப் பிறகு மேலாண்மைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகியிருக்கிறது. இந்த வருடம் நான் துணை வேந்தர்

அவர்களுக்கும், பதிவாளர் அவர்களுக்கும் இதுபோன்று காலதாமதம் ஏற்படக்கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறேன். உள்ளாட்சித் தணிக்கைத் துறையில் போதுமான பணியார்கள் இல்லாததும் இந்தக் காலதாமதத்திற்கு ஒரு காரணம் ஆகும்.

As far as the units are concerned, we have 29 Units 3 Colleges all over the State. ஒவ்வொரு துறையினுடைய தனிக் கணக்குகளின் தணிக்கை, மாவட்ட உள்ளாட்சித் தணிக்கைத் துறை நிவர்த்தி செய்து, தலைமையகத்திற்கு அனுப்பியவுடன் பல்கலைக்கழகம் அவற்றை தொகுக்கின்றது. இதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. இனிமேல் இதுபோன்ற காலதாமதம் வராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

குழுவின் கருத்து

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் 2003–2004 ஆம் ஆண்டிறக்கான ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றம் தணிக்கை அறிக்கை பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

மா. செல்வராஜ்,
செயலாளர்.

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

20.11.2006, 21.11.2006 மற்றும் 22.11.2006	கன்னியாகுமரி திருநெல்வேலி	மற்றும்
29.11.2006	சென்னை	
25.01.2007	சென்னை	

மா. செல்வராஜ்,
செயலாளர்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS